Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# புராணச் சிற்பங்கள்

**இரா. ரெமிதா & முனைவர்.தே. நாகலெட்சுமி**
**தெ.தி. இந்துக்கல்லூரி,**
**நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்-629002.**

33

**ஆய்வு சுருக்கம்**

மனிதனின் சமயம் சார்ந்த எண்ணங்களின் கற்பனைப் படைப்பே இன்றைய கடவு ள் உருவங்கள். மனிதன் தனது சமயம் சார்ந்த எண்ணங்களுக்கு ஒரு வடிவம் காண நினைத்தான். அதன் விளைவாக இறையுருவங்கள் உருவாயின. புராண காலத்தில் தான் இறைவனது வீரதீரச் சாகசங்கள் பற்றிய கதைகள் அதிகமாக தோன்றியிருக்க வேண்டும். எனவே, புராண காலத்திற்குப்பின் படைக்கப்பட்ட சிற்பங்களும் புராண காலத்தில் கூறப்பட்ட இறைவனின் வீரதீரச் சாகசங்களைப் பிரதிபலிப்பதாக அமைந்தன. எனவே, புராண சிற்பங்கள் தோன்றின எனலாம். விஷ்ணு கோயில்களில் இதிகாசச் சிற்பங்கள், விஷ்ணு மற்றும் விஷ்ணுவின் அவதாரச் சிற்பங்களை அடுத்து புராணச் சிற்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வைணவக் கோயில்களில் சைவப் புராணங்களின் அடிப்படையிலும் பல சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. எனவே சைவம், வைணவம் என்ற பாகுபாடு இன்றி அனைத்துச் சிற்பங்களும் ஒரே மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது விஜயநகர - நாயக்கரின் சமயப் பொறைக்குச் சான்றாக அமைகிறது. வடமொழியில் பிரதான புராணங்கள் பதினெட்டு என்றும் கூறப்பட்டுள்ளன. துணைப் புராணங்கள் பதினெட்டு என்றும் கருதப்படுகின்றன. தமிழில் சிவன் தொடர்பாக திருவிளையாடற்புராணங்கள் இரண்டு உள்ளன. ஒன்று கி.பி. 13, 14ஆம் நூற்றhண்டுகளில் பெரும்பற்றப்புலியூர் நம்பியாலும் மற்றொன்று கி.பி.16-ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவராலும் எழுதப்பட்டவை. திருவிளையாடற்புராணத்தில் சிவனது சிறப்பான செயல்களைக் குறிப்பிடும் சிற்பங்கள் அதிகமாக மண்டபச் சிற்பங்களில் கையாளப்படுகின்றன. காளிக்கு இரண்டு கரங்களோ, எட்டுக் கரங்களோ இருக்கும். தலையில் ஜுவாலகேசம் இருக்கும். இறைவன் மீது முரட்டுத் தனமான, ஆழமான அன்பு கொண்ட கண்ணப்பநாயனாருக்கு திருமெய்யத்தில் சிற்பம் அமைந்துள்ளனா. இச்சிற்பம் இடது தோளில் வில்லும், இடது உள்ளங்கையில் கண்ணும், வலது கையில் உள்ள கத்தியால் தனது கண்ணைத் தோண்ட முயல்வது போலும் அமைந்துள்ளது.

**கடவுச் சொற்கள்**

இறையுருவங்கள் - சாகசங்கள் - புராண சிற்பங்கள் - வைணவக் கோயில்கள் - சைவம் - திருவிளையாடற்புராணம் - கண்ணப்பநாயனார் - பரஞ்சோதி - வீரபத்ரன் – காளி

**புராணச் சிற்பங்கள்**

**முன்னுரை**

புராண காலத்தில் தான் இறைவனது வீரதீரச் சாகசங்கள் பற்றிய கதைகள் அதிகமாக தோன்றியிருக்க வேண்டும். எனவே, புராண காலத்திற்குப்பின் படைக்கப்பட்ட சிற்பங்களும் புராண

காலத்தில் கூறப்பட்ட இறைவனின் வீரதீரச் சாகசங்களைப் பிரதிபலிப்பதாக அமைந்தன. எனவே, புராண சிற்பங்கள் தோன்றின எனலாம். விஷ்ணு கோயில்களில் இதிகாசச் சிற்பங்கள், விஷ்ணு மற்றும் விஷ்ணுவின் அவதாரச் சிற்பங்களை அடுத்து புராணச் சிற்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வைணவக் கோயில்களில் சைவப் புராணங்களின் அடிப்படையிலும் பல சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. எனவே சைவம், வைணவம் என்ற பாகுபாடு இன்றி அனைத்துச் சிற்பங்களும் ஒரே மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது விஜயநகர - நாயக்கரின் சமயப் பொறைக்குச் சான்றாக அமைகிறது. வடமொழியில் பிரதான புராணங்கள் பதினெட்டு என்றும் கூறப்பட்டுள்ளன. துணைப் புராணங்கள் பதினெட்டு என்றும் கருதப்படுகின்றன. தமிழில் சிவன் தொடர்பாக திருவிளையாடற்புராணங்கள் இரண்டு உள்ளன. ஒன்று கி.பி. 13, 14ஆம் நூற்றhண்டுகளில் பெரும்பற்றப்புலியூர் நம்பியாலும் மற்றொன்று கி.பி.16-ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவராலும் எழுதப்பட்டவை. திருவிளையாடற்புராணத்தில் சிவனது சிறப்பான செயல்களைக் குறிப்பிடும் சிற்பங்கள் அதிகமாக மண்டபச் சிற்பங்களில் கையாளப்படுகின்றன. புராணச் சிற்பங்களில் வீரபத்ரன், ஊர்த்துவதாண்டவா, காளி, கண்ணப்பநாயனார், சலந்தரன், ரதி-மன்மதன், மோகினி, கருடன், தடாதகைப் பிராட்டி, தக்கன், கார்த்தவீரியார்ச்சுனன் ஆகியோரது சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

**வீரபத்ரன்**

வீரபத்ரனது சிற்பம் ஸ்ரீ வைகுண்டம், நாங்குனேறி, தாடிக்கொம்பு, கிருஷ்ணாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய கோயில்களில் இடம் பெறுகிறது. வீரபத்ரனது சிற்பம் ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு பெயர்களைப் பெற்று விளங்குகிறது. வீரபத்ரன் தக்கனை வதம் செய்வதற்காக உருவானவர். தக்கன் தான் செய்த பெரிய யாகத்திற்குத் தனது மருமகனான சிவபெருமானை அழைக்காது அவமதித்தார். இதனால் கோபமடைந்த சிவன் ஆணவத்துடன் கூடிய தக்கனை வீரபத்ரனாக மாறி அழிக்கிறார் என்பது வீரபத்ரன் தொடர்பான கதையாகும். வீரபத்ரன் சிற்பம் நான்கு கரங்கள் கொண்டு பின்னிருகரங்களில் திரிசூழமும், கதையும் முன்னிரு கரங்களில் அபய, வரத முத்திரையும் கொண்டு இடம் பெறும். சிற்பங்களின் அடிப்படையில் பார்க்கின்ற போது வீரபத்ரருக்கு இரண்டு முதல் பத்துக் கரங்கள் வரை அமைக்கப்படும் எனத் தெரிகிறது. வீரபத்ரன் ஜடாமகுடத்துடனும் நான்கு கரங்களுடனும் கோபமான பார்வையுடனும் காணப்படுவார் என்றும் கரங்களில் அம்பு, வில் மற்றும் கத்தி, கேடயம் ஆகியன இடம் பெறும் என்றும் வீரபத்ரன், தக்கன் மீதோ அல்லது தாமரை மலர் மீதோ கால் ஊன்றிக் காணப்படுவார் என்றும் காரண ஆகமம் கூறுகின்றது. எனவே, தக்கனை அழிக்க வேண்டி கோபத்துடன் உள்ள வீரபத்ரனது கரங்கள் அபயம், வரதம் காட்ட வேண்டியது இல்லை என்பதால் முன்னதுபொருந்தவில்லை.

பின்னதனை மட்டுமே பொருத்தமுடையதாகக் கொள்ளலாம். வீரபத்ரனது சிற்பம் தமிழகத்தில் முதன்முதலில் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலேயே இடம் பெற்றுள்ளது. விஜயநகர – நாயக்கா கால மண்டபங்களில் அதிக அளவில் இடம் பெறும் சிற்பங்களில் வீரபத்ரனும் ஒருவராவார். ஸ்ரீவைகுண்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், கிருஷ்ணாபுரம், நாங்குனேறி, ஆகிய இடங்களில் வீரபத்ரன் இரண்டு கரங்களுடன் காணப்படுகிறார். ஒரு காலைத் தக்கன் மீது ஊன்றி மறுகாலைத் தூக்கியபடியும்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

வலது கையில் நீண்ட வாளால் தக்கனைக் குத்தியபடியும் மறுகை கேடயத்துடன் மேலே தூக்கியப்படியும், ஜுவாலகேசத்துடனும், மூன்று கண்களுடனும் காட்டப்பட்டுள்ளார். கபால மாலை அணிந்துள்ளார். ஸ்ரீவில்லிபுத்தூரில் மட்டுமே ஊர்த்துவ முக வீரபத்ரன், நிருத்துவ வீரபத்ரன், அகோர வீரபத்ரன் என மூன்று வீரபத்ரா சிற்பங்கள் இடம் பெறுகின்றன. இதில் நிருத்துவ வீரபத்ரன், அகோரவீரபத்ரன் ஆகிய இருவரின் காலடியில் தக்கன் உருவம் காணப்படவில்லை. அகோரவீரபத்ரன் ஒரு பெண்ணின் தலை மீது தூக்கிய காலை வைத்துள்ளார். அவரது வலது கரத்தில் உள்ள வாள் ஆடை நெகிழ்ந்த ஒரு பெண்ணின் தலை மீது உள்ளது. ஊர்த்துவமுக வீரபத்ரரது தூக்கிய காலின் பாதத்தில் ஒரு தலை காட்டப்பட்டுள்ளது. இதனைத் தக்கனது தலையாகக் கொள்ளலாம். தாடிக்கொம்பில் வீரபத்ரன் பத்துக் கைகளுடன் காட்டப்பட்டுள்ளார். அனைத்துக் கைகளிலும் ஆயுதங்கள் ஏந்தி தக்கனின் மேல் நின்று வாளைப் பாய்ச்சுவது போல் காட்டப்பட்டுள்ளார். இதில் தக்கனது உருவம் நன்கு செதுக்கப்பட்டுள்ளது.

**ஊர்த்துவ தாண்டவர்**

ஊர்த்துவ தாண்டவர் எட்டு அல்லது பதினாறு கைகளுடன் முயலகன் மீது வலது காலைத் தூக்கி ஆடிய நிலையில் இருப்பார். தாடிக்கொம்பு கோயிலில் மட்டும் ஊர்த்துவதாண்டவர் சிற்பம் இடம் பெறுகிறது. எட்டுக் கைகளுடன் வலது காலைத் தூக்கி ஆடுகிறார். கீழே முயலகன் கையில் பாம்புடன் படுத்துள்ளார். கீழே இடது புறம் காரைக்கால் அம்மையார் இடம் பெறுகிறார். வலது புறம் நந்தி மத்தளம் இசைக்கிறார். பேரூர், மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஆகிய இடங்களில் இடம் பெறும் ஊர்த்துவதாண்டவச் சிற்பங்கள் மிக அழகு வாய்ந்தவை. தாடிக்கொம்பில் ஊர்த்துவதாண்டவருக்கு எதிரே காளி இடம் பெற்றுள்ளது பொருத்தமாக அமைகிறது.

**காளி**

காளிக்கு இரண்டு கரங்களோ, எட்டுக் கரங்களோ இருக்கும். தலையில் ஜுவாலகேசம் இருக்கும். கோரைப்பற்கள் இடம் பெறும். ஆண்டாள் கோயில், தாடிக்கொம்பு ஆகிய இருகோயில்களில் காளியின் சிற்பம் இடம் பெறுகிறது. தாடிக்கொம்பில் காளியின் தலையில் ஜுவாலகேசம், எண் கரங்கள், கோரைபற்களோடு அதிகமான நடனத்திற்குரிய ஆடை ஆபரணங்களுடன் இடம் பெறுகின்றது. ஏற்கனவே கண்டதுபோல் ஊர்த்துவதாண்டவருக்கு நேர் எதிரே இடம் பெற்றிருப்பது பொருத்தமாக அமைகிறது. ஆண்டாள் கோயிலில் இரு கரங்களுடன் காணப்படும் காளி சிற்பம் ஒரு கை சின் முத்திரையுடனும், மறுகை சூலத்துடனும் இடம் பெறுகிறது. காளிக்கு நேரே திருமாலின் மோகினி அவதாரம் இடம் பெற்றுள்ளது. இங்குக் கோபத்துடன் காளியும் புன்னகையுடன் மோகினியும் என முறையே வெகுளி, நகை எனும் இருவேறு மெய்ப்பாடுகளை எதிர்எதிர் சிற்பங்களில் இடம் பெறச் செய்துள்ளதாகக் கருதலாம்.

**கண்ணப்பநாயனார்**

பெரிய புராணத்தில் இடம் பெறும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் கண்ணப்பநாயனாரும் ஒருவர். இறைவன் மீது முரட்டுத் தனமான, ஆழமான அன்பு கொண்ட கண்ணப்பநாயனாருக்கு திருமெய்யத்தில் சிற்பம் அமைந்துள்ளனர். இச்சிற்பம் இடது தோளில் வில்லும், இடது

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

உள்ளங்கையில் கண்ணும், வலது கையில் உள்ள கத்தியால் தனது கண்ணைத் தோண்ட முயல்வது போலும் அமைந்துள்ளது. காலில் செருப்புடன் நின்ற கோலத்தில் காணப்படும் கண்ணப்பநாயனாரில் கால்களுக்கருகில் சிறிய லிங்கம் இடம் பெற்றுள்ளது. கண்ணப்பநாயனார் சிற்பம் பல கோயில்களில் விஜயநகர - நாயக்கர் காலத்தில் இடம் பெற்றது. மதுரை மீனாட்சியம்மன் கோயில் புதுமண்டபத்தில் இத்தகு சிற்பம் இடம் பெற்றுள்ளது.

**சலந்தரன்**

சலந்தரன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து கடலில் விழுந்த தீப்பிழம்பிலிருந்து உதித்தவன். அவன் அசுரர்களில் சிறந்த வீரனாய் விளங்கினான். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் சிவபெருமானிடம் தோற்றுப்போன இவன் பார்வதியைக் கெடுக்க எண்ணினான். சிவபெருமானின் உருவமெடுத்து மாயச்சிவனாக பார்வதியை அணுகினான். பார்வதி மாயச் சிவனை சந்தேகித்தாள். போர் நடவடிக்கைகளை அவ்வப்போது தனது வாகனமான கருடன் மூலம் தெரிந்து கொண்ட மகாவிஷ்ணு சலந்தரனின் மாய வேடத்தையும் புரிந்து கொண்டார். எனவே, ஒரு சாது வேடம் கொண்டு சலந்தரனின் மனைவி பிருந்தாவை (விருந்தா) அணுகி அவள் முன் சலந்தரனாகத் தோன்றி அவளுடன் கூடினார். பின் உண்மை நிலை அறிந்த சலந்தரன் உடனே போர்க்களம் வந்து போரிட்டு மாண்டான். சலந்தரனது சிற்பம் திருமெய்யம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் இடம் பெறுகிறது. சலந்தரன் இடம் தோளில் சிறு வில்லுடன் தனது மீசையைத் தடவியவாறும், வலது கையில் உருவிய வாளுடனும் காணப்படுகிறான். இத்தகு சலந்தரனது சிற்பம் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில், கண்ணப்பநாயனார் சிற்பத்தின் எதிரே உள்ள தூணில் இடம் பெறுகிறது.

**ரதி - மன்மதன்**

இந்து சமயத்தில், ரதியும், மன்மதனும் படைப்பிற்கு ஓர் உந்து சக்தியாக விளங்குபவர்கள் ஆவார். மன்மதனுக்கு காமன் என்ற பெயரும் உண்டு. காமனுக்கெனத் தனியாகச் சமயப் பிரிவு இல்லை என்றாலும் முக்கியக் கடவுளாகக் கொள்ளலாம். காமன் என்ற பெயருக்கு இச்சை என்று பொருள். இவர்கள் பிறரின் மனதில் இச்சையைத் தூண்டி படைப்பிற்கு உதவுகின்றனர். ஹரிவம்சத்தில் இலக்குமியின் மகன் காமன் என்று கூறப்பட்டுள்ளது. காமசூத்திரத்தில் மன்மதன் மகிழ்ச்சி மற்றும் காமம் முதலியவற்றை ஊட்டக்கூடியவர் என்று கூறப்படுகிறது. சிவன் தவம் செய்து கொண்டிருக்கும் போது சிவனிடம் காம உணர்வுகளை ஊட்ட வேண்டி பிரம்மனால் அனுப்பப்பட்ட காமன் தன் மலர் அம்பினால் காம உணர்வினை ஊட்டத் தயாரானதை அறிந்து சிவபிரான் கோபமடைந்து காமனை தனது நெற்றிக் கண்ணால் எரித்து விடுகிறார். காமனின் மனைவி ரதி தன் கணவன் இறந்தபின் தான் உயிர் வாழ விரும்பவில்லை என காமனின் தம்பி வசந்தனிடம் கூறும் போது அசரீரி ஒன்று “சிவனுக்கும் பார்வதிக்கும் எப்பொழுது திருமணம் நடக்கிறதோ அப்பொழுது உன் கணவன் உயிர் பெற்று வருவான். எனினும் பிறர் கண்களுக்குத் தெரியமாட்டான். உன் கண்களுக்கு மட்டும் தெரிவான். அதுவரை உன் கணவனின் சாம்பலைப் பாதுகாத்துவை” என்று கூறியது எனக் காமன் கதையைக் குமார சம்பவம் கூறும். காமனது வடிவத்தைப் பற்றிக் கூறும்போது

இவருக்கு இரண்டு, நான்கு அல்லது எட்டுக்கரங்கள் இருக்க வேண்டும். கையில் கரும்புவில் இருக்கும். மேலும், காமனது அம்பானது ஐந்து பூக்களைக் குறிக்கும். மேலும், அது நீலத்தாமரை, மல்லிகை, மாம்பூ, செண்பகப்பூ, சிவிசா எனப் பெயர் பெறும். இவரது கொடி மகரக்கொடி, வாகனம் கிளி அல்லது தேர் என சிவராமமூர்த்தி கூறுகிறார். சில்பரத்தினம் என்னும் நூலில் காமனுக்கு கைகள் நான்கு எனக் கூறப்பட்டுள்ளது. அவற்றில் பாசம் அங்குசம், மலரம்பு, கரும்புவில் ஆகியன அமைந்திருக்கும் என்றும் தலையில், ரத்தினக் கிரீடத்துடன் தாமரை மேல் இருப்பான் எனவும் கூறுகிறது. விஷ்ணுதர்மோத்ரா புராணம் காமனுக்கு எட்டுக் காரங்கள் என்றும் அவற்றில் சங்கு, சக்கரம், வில், அம்பு ஆகியன இருக்கும். மற்ற நான்கு கரங்கள் அவரது மனைவியரான ரதி, பிரிதி, சந்தி, மகாசக்தி ஆகியோருடைய மார்பகங்களில் இருக்கும் என்கிறது. தமிழகக் கோயில்களில் காமனது சிற்பம் பல்லவர், முற்காலப் பாண்டியர், சோழர் ஆகியோரது காலத்தில் இடம் பெறவில்லை. விஜயநகரர் ஆட்சிக்காலத்தில் தான் மண்டபங்களில் இச்சிற்பம் பெருமளவில் இடம் பெற்றுள்ளது. திருக்குறுங்குடி, கிருஷ்ணாபுரம், தாடிக்கொம்பு, ஆண்டாள்கோயில், திருமோகூர், அழகர்கோயில், திருமெய்யம் ஆகிய ஏழு கோயில்களில் ரதி - மன்மதன் சிற்பம் இடம் பெற்றுள்ளது. திருமெய்யத்தில் மட்டும் ரதி இன்றி மன்மதன் மட்டும் இடம் பெற்றுள்ளான். பிற கோயில்களில் ரதியும் - மன்மதனும் எதிரெதிரே இடம் பெறுகின்றனர்.

தாடிக்கொம்பு தவிர பிற கோயில்களில் மன்மதன் சிற்பம் இரண்டு கைகளும் அவற்றில் தாடிக்கொம்பில் ஆறு கைகளுடன் திகழ்கிறான். இவற்றில் வலப்பக்கங்களில் இரண்டில் மலரம்பும் மற்றொன்றில் அங்குசமும், இடபக்ககரங்களில் மலர்ச்செண்டும் கரும்பு வில்லும் பாசமும் கொண்டு காணப்படுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரிலும், திருக்குறுங்குடியிலும் மன்மதன் சிற்பம் நின்றபடி அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஸ்ரீவில்லிபுத்தூர் தேரோட்டத்திற்கு பெயர்பெற்ற இடம் என்பதாலோ என்னவோ மன்மதனுடைய தேர் மிக அருமையாகச் செதுக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவற்றில் மிக அழகான சிற்பம் திருமோகூர் மன்மதன் சிற்பமாகும். தாடிக்கொம்பு கோயிலில் மன்மதனும் - ரதியும் அக்கிராம மக்களால் மஞ்சள் பூசி வழிபடப்படுகின்றனர். மன் மதன் - ரதி ஆகியோரை வழிபடுவதால் திருமணம் தாமதப்பட்டவர்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும் என நம்புகின்றனர். ரதி சிற்பம் எல்லாக் கோயில்களிலும் அன்னத்தின் மீது ஒரு காலைக் குத்திட்டபடியும் மறுகாலைத் தொங்கவிட்டப்படியும் அமர்ந்த நிலையில் வளங்குகிறது. எல்லாச் சிற்பங்களிலும் வலக்கையில் மலரம்புடன் காட்டப்படுகிறாள். இடக்கையைக் காட்டும்போது திருக்குறுங்குடியில் அன்னத்தின் கழுத்திலிருந்து வரும் கயிற்றை இடது கையில் பற்றியபடியும் கிருஷ்ணாபுரம், ஆண்டாள் கோயில் ஆகிய இடங்களில் கையில் கண்ணாடி வைத்துக் கொண்டும், தாடிக்கொம்பில் கரும்பு வில்லுடனும் காட்டப்பட்டுள்ளான். உத்தரமேரூர் சுந்தரவரதர் கோயிலில் ரதியைத் தழுவியபடி காமன் காட்டப்பட்டுள்ளான். இத்தகு சிற்பம் இப்பகுதியில் வேறு கோயில்களில் காணப்படவில்லை. இதுவரை கண்ட ரதி - மன்மதன் சிற்பங்களை வைத்துப் பார்க்கின்றபோது ரதி - மன்மதன் சிற்பங்கள் மண்டபச் சிற்பங்களில் அதிக அளவில் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. எனவே விஜயநகர – நாயக்கர் காலத்தில் ரதி - மன்மதனுக்கு அதிக அளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது தெரிய

வருகிறது.

**மோகினி**

மோகினி என்பது திருமாலின் சிறு அவதாரங்களில் ஒன்றாகும். திருமால் மோகினி உருவம் எடுத்த கதை மச்சயபுராணத்திலும், பாகவதபுராணத்திலும் காணப்படுகிறது. மந்தரமலையை மத்தாகவும், வாசுகி எனும் பாம்பை நாணாகவும் வைத்து அசுரர்கள் பாம்பின் தலைப்பகுதியிலும், தேவர்கள் வால் பகுதியிலும் இருந்து அமுதம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தனர். விஷ்ணு அப்போது மோகினி வடிவத்தில் அமிர்த கலசத்துடன் தோன்றினார். தேவர்களையும், அசுரர்களையும் இரண்டு வரிசைகளாக நிற்கச் செய்து முதலில் தேவர்களுக்கு அமிர்தம் அளித்தார். இதன் நோக்கத்தை அறிந்த இராகு மட்டும் உருமாறி தேவர்கள் வரிசையில் நின்று அமிர்தம் வாங்கிப் பருகினார். ஆனால் இதை அறிந்த விஷ்ணு அமிர்தம் இராகுவின் உடலுக்குள் செல்வதற்கு முன்பே தன் சக்கராயுதத்தால் தலையைக் கொய்தார். அசுரா;களுக்கு அமுதம் வழங்காது தேவர்களுக்கு மட்டும் வழங்கினார். தமிழ் இலக்கியத்தில் ஆழ்வார்கள் மோகினி அவதாரம் பற்றிப் பாடியுள்ளனர். மோகினிச் சிற்பம் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் வைகுந்தப்பெருமாள் கோயிலிலும் காணப்படுகிறது. ஆண்டாள் கோயிலில் மட்டும் மோகினிச் சிற்பம் இடம் பெற்றுள்ளது. மோகினிச் சிற்பமானது நின்ற நிலையில் உள்ளது. மோகினியின் வலப்புறமும் இடப்புறமும் தாடி வளர்த்த இரு முனிவர்கள் மோகினியின் அழகில் மோகித்து நிற்க, கீழே ஒருவன் அமிர்தம் வேண்டி நிற்கிறான். இச்சிற்பத்தின் பக்கவாட்டில் சிவபெருமான் காட்டப்பட்டுள்ளார். சிவனது அழகில் மயங்கியபடி ரிசிபத்தினிகள் ஆடை நெகிழ நிற்கின்றனர். சைவத்திலும், வைணவத்திலும் இறைவனின் அழகையும், பெருமையினையும் கூறும் இக்கதைகள் இரண்டும் ஒரே இடத்தில் இடம்பெறச் செய்திருப்பது சிற்பியின் புராண ஈடுபாட்டையும் அழகுணர்ச்சியையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**கருடன்**

இந்து சமயத்தில் இறைவனுக்கு வாகனங்களாகப் பறவைகளையும், விலங்குகளையும் இடம் பெறச் செய்வர். விஷ்ணுவுக்கு கருடன், சிவனுக்கு ரிசபம், முருகனுக்கு மயில், விநாயகருக்கு மூசிகம், அக்கினிக்கு ஆடு, இந்திரனுக்கு யானை போன்றவற்றை உதாரணங்களாகக் கூறலாம். வைணவத்தில் கருடனுக்கு முக்கியமான இடம் அளித்திருக்கின்றனர் என்பதை அவர் “பெரிய திருவடி” என்று வைணவசம்பிரதாயத்தில் அழைக்கப்படுவதினின்றும் அறியலாம். எல்லா விஷ்ணு கோயில்களிலும் மகாமண்படத்தில் அல்லது முன் மண்டபத்தில் விஷ்ணு கருவறையின் நேர் எதிரே இறைவனைப் பார்த்து கருடாழ்வார் சந்நிதி இடம் பெற்றிருக்கும். கருடன் காஸ்யபமுனிவருக்கும், வினதாவுக்கும் மகனாகப் பிறந்தவர். காஸ்யபர்காத்ரு எனும் பெண்ணை மணந்து கொண்டு இருவரும் சேர்ந்து வினதையைச் சிறை வைத்தனர். தன் தாயை மீட்கக் கருடன் அமிர்தம் கொண்டு வரச் சென்றான். அமிர்தம் கொண்டு வந்து தன் தாயை அடிமை நிலை நிலையிலிருந்து மீட்டான். ஸ்ரீதத்வநிதி எனும் நூலில் கருடனைப் பற்றிக் கூறும்போது கருடன் மனித உருவில் இருப்பார். ஆனால் மூக்கு மட்டும் கருடனது மூக்குபோல் கூர்மையாக இருக்கும். இரண்டு கைகளும் அஞ்சலியில் இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. சில்பரத்னம் என்னும் நூலில் கருடனுக்கு இரண்டு கரங்கள் எனவும், அவை

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அபயத்தில் இருக்கும் எனவும், சில நேரம் எட்டுக் கரங்களுடன் இருப்பார் எனவும் கூறப்பட்டுள்ளது. அவற்றில் அம்பரோசா எனும் அமிர்தமரம், கதை, சங்கு, சக்கரம், கேடயம், கத்தி ஆகியவற்றை ஏந்தியும் மற்ற இரண்டு கரங்கள் வணங்கிய நிலையில் அமைந்திருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் அழகர்கோயில், திருக்குறுங்குடி ஆகிய இடங்களில் கருடனது சிற்பம் இடம் பெறுகிறது. இவ்விரு இடங்களிலும் இறக்கைகளுடன் கைகள் அஞ்சலி முத்திரையிலும் இடம் பெற்றுள்ளன. அழகர்கோயிலில் கருடனுக்கு முன் திரிவிக்ரமனது சிற்பம் இடம் பெற்றுள்ளது என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. திருக்குறுங்குடியில் மண்டபத்தின் வாயிலில் இருமருங்கிலும் கருடன், அனுமன் சிற்பம் இடம் பெற்றிருக்கின்றன. இவை இரண்டும் முறையே பெரிய திருவடி, சிறிய திருவடிகளாகும்.

**தக்கன்**

இச்சிற்பம் திருக்குறுங்குடியில் மட்டும் இடம் பெற்றுள்ளது. இச்சிற்பமும் திருவிளையாடற்புராணத்தைப் பின்பற்றியே அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சிற்பம் வீரபத்ரன் சிற்பத்திற்கு எதிரே அமைந்துள்ளது. கைகளில் வில் மற்றும் வாளை ஏந்தியபடி காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பவமைதி வீரபத்ரனுடன் போர்புரிய வேண்டி தக்கன் வீரபத்திரனை எதிர்த்து நிற்பதாகக் கொள்ளலாம்.

**கார்த்தவீரியார்ச்சுனன்**

கார்த்தவீரியார்ச்சுனன் ஆயிரம் கைகள் கொண்டவன். இவன் இராவணனையே சிறையிலடைத்தபெருமை பெற்றவன். எனினும் பரசுராமனிடம் தோற்றவன். இத்தகு கார்த்தவீரியார்ச்சுனன் சிற்பம் தாடிக்கொம்பில் சக்கரத்தாழ்வாருக்கு எதிரே பதினாறு கைகளுடன் இடம் பெற்றுள்ளது. இது கார்த்தவீரியார்ச்சுனன் தான் என அறுதியிட்டுக் கூறுவதற்கான அகச் சான்றுகள் எதுவும் இச்சிற்பத்தில் இடம் பெறவில்லை. இதுவரை கண்ட புராணச் சிற்பங்களிலிருந்து மக்களிடையே செல்வாக்குப் பெற்ற புராணங்களிலிருந்து சிற்பங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது. ரதிமன் மதன் சிற்பங்கள் அதிக அளவில் கையாளப்பட்டுள்ளன. சைவ, வைணவ வேறுபாடின்றி வைணவக் கோயில்களில் சைவம் தொடர்பான சிற்பங்களையும் இடம் பெறச் செய்துள்ளனர்.

**முடிவுரை**

மனிதனின் சமயம் சார்ந்த எண்ணங்களின் கற்பனைப் படைப்பே இன்றைய கடவுள் உருவங்கள். மனிதன் தனது சமயம் சார்ந்த எண்ணங்களுக்கு ஒரு வடிவம் காண நினைத்தான். அதன் விளைவாக இறையுருவங்கள் உருவாயின. இந்தியாவில் சிந்து சமவெளி நாகரிக காலத்திலேயே இறையுருவங்கள் இருந்துள்ளன. ஆனால், அவற்றில் சமயச் சார்பு தெரியவில்லை. தூணில் இடம் பெறும் சிற்பத்துடன் தொடர்புடைய மற்ற சிற்பங்கள் பக்கவாட்டிலோ, எதிரிலோ அமைக்கப்படுவது ஒரு பொதுமரபாகவே இருந்து வந்துள்ளது. சில இடங்களில் இம்மரபு பின்பற்றப்படாமல் இருந்திருக்கலாம். இக்காலத்தில் பாலியல் சிற்பங்கள் வெகுவாக இடம் பெற்றுள்ளமை கலைஞனின் படைப்பில் அரசரின் கட்டுப்பாடு குறைந்துள்ள நிலையையே நமக்கு உணர்த்துவதாகக் கொள்ளலாம். இறையுருவங்கள் பொதுவாக ஏதேனும் ஒரு சமயக் கருத்தை மையமாக வைத்து அமைக்கப்பெறும்.

பெரும்பாலான சிற்ப அமைதிகளில் குறியீட்டு நிலையில் மற்றுமோர் உட்கருத்து அமைந்திருக்கும். அல்லது அச்சிற்ப அமைதி புதியதொரு கருத்துருவாக்கத்திற்கு இடமளிப்பதாக இருக்கும்.

**துணை நூற் பட்டியல்**


1. நாகசாமி.இரா.,*தமிழக கோயிற்கலைகள்*, சென்னை, 1963.
2. வெங்கட்ராமன். ஆர்.,*இந்தியக் கோயில் கட்டிடக் கலை வரலாறு*, மதுரை, 1983.
3. வேதாச்சலம். வெ.,*பாண்டியநாட்டில் வாணாதிராயர்கள்*, மதுரை, 1987.
4. வேங்கடராமன். சு.,*அரையர் சேவை*, சென்னை, 1985.
5. மணிவண்ணன். டாக்டர்.எல்.,*பாண்டியநாட்டு வைணவக் கோயில்களின் கலையும், கட்டிடக் கலையும்*, மதுரை, 2000.
6. வைத்தியலிங்கன். செ.,108 *வைணவ திவ்ய தேச வைபவமும்*, சென்னை, 1992.
7. வைத்திய லிங்கன். செ.,*தமிழ்ப் பண்பாட்டு வரலாறு*, சிதம்பரம், 1991.
8. கிருஷ்ணன். எஸ்.,*ஆழ்வார்திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் கோயில் வரலாறு*, 1995.
9. சுப்புரெட்டியார். ந.,*பாண்டியநாட்டுத் திருப்பதிகள்*, சென்னை, 1977.
10. சுயம்பு. பெ., *கடவுள் உருவங்கள்*, திருச்செந்தூர், 1992.
11. தாதாச்சாரியார். என்.எஸ்.,*நவதிருப்பதிகளும் ஆழ்வார்களின் வரலாறும்*, திரப்பாராய்த்துறை, 1993.
12. பாலசுப்பிரமணியம்,*சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும், ஓவியங்களும்*, தஞ்சாவூர், 1987.
13. சிவ ராமமூர்த்தி.க.,*இந்திய ஓவியம்*, சென்னை, 1979.
14. Banarjee. J.N.,*Development of Hindu Iconography*, Calcutta, 1956.
15. Jeyachandran. A.V.,*Madurai Temple Complex, Madurai Kamaraj University*, Madurai, 1985.